திருச்சியில் கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வருகின்ற 22 ஆம் தேதி (750 காளைகள்) நடைபெற இருக்கும் ஜல்லிக்கட்டு விழாவை முன்னிட்டு காஜாமலையில் உள்ள அண்ணா விளையாட்டு அரங்கில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு விழா பந்தல் காலை வைத்து ஏற்பாடுகளை தொடங்கி வைத்தார். அருகில் மாநகரச் செயலாளர் அன்பழகன், பொருளாளர் துரைராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் காஜாமலை விஜய், மாவட்ட துணைச் செயலாளர் விஜயா ஜெயராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் கமல், முஸ்தபா, முத்துக்குமரன், கலைச்செல்வி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திருச்சியில் பிரம்மாண்ட வேலைவாய்ப்பு முகாம் :

11 ஆயிரம் பேருக்கு பணி நியமன ஆணைகள்!

அமைச்சர் கே.என்.நேரு வழங்கி சிறப்புரை!

திருச்சி, பிப்.9-

திருச்சி கேர் (CARE) கல்லூரியில், தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு அவர்களின் முன்னெடுப்பிலும், நேரடி மேற்பார்வையிலும் பிரம்மாண்ட தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது.

கிவ் லைஃப் (Give Life) மற்றும் தி ரைஸ் (The Rise) அறக்கட்டளைகளின் ஒருங்கிணைப்பில் இந்த முகாம் நடத்தப்பட்டது.

இம்முகாமில் 17,000 க்கும் மேற்பட்ட வேலை தேடும் இளைஞர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட ஆட்சியர் சரவணன்,

வேலை வாய்ப்பு கிடைத்த பின்பும் அனைவரும் விடா முயற்சி, சுய ஒழுக்கம், சுய மதிப்பீடோடு வாழ வேண்டும், புதியவற்றை தொடர்ந்து கற்று கொள்ள வேண்டும் என்றார்.

பெரம்பலூர் எம்.பி அருண் நேரு பேசுகையில்,

திருச்சியில் அனைத்து வாய்ப்புகளும், திறமைகளும் உள்ள பகுதி. அனைத்து தொழில் நிறுவனங்களுக்கும் திருச்சி மையமே கேந்திரமாக விளங்கும் எனவே இதனை பயன்படுத்தி அனைத்து தொழில் நிறுவனங்களும் திருச்சிக்கு வர வேண்டும் மாவட்ட நிர்வாகமும் அரசும் அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கும் என்றார்.

நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு பேசுகையில்,

இன்றைய நாள் எனக்கு வாழ்க்கையை மிகவும் சிறப்பான நாளாக உள்ளது பலருக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதில் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. என்னுடைய சகோதரர் ராமஜெயம் பல எதிர்பார்ப்புகளோடு இந்த கல்லூரியை கட்டினார் அந்த எதிர்பார்ப்புகள் இன்று நிறை வடைந்துள்ளது என்றார்.

டாட்டா எலக்ட்ரானிக்ஸ், ஸ்னைடர் எலக்ட்ரிக், MRF, ஹுண்டாய், யூனோ மிண்டா மற்றும் திருச்சியின் முன்னணி நிறுவனமான வி.டாட் (V.Dot) உள்ளிட்ட 327 நிறு வனங்கள் கலந்து கொண்டன. மொத்தம் 21,000க்கும் அதிகமான காலிப்பணியிடங்களுடன் நிறுவனங்கள் வருகை தந்திருந்தன.

பங்கேற்றவர்களில் சுமார் 11,000 பேருக்கு உடனடியாக பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. மேலும் பலர் இரண்டாம் சுற்று நேர்காணலுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த முகாமில் 10,000 க்கும் மேற்பட்ட இளம் பெண்கள் கலந்து கொண்டது, சமூகத்தில் பெண்களின் பொறுப்புணர்வையும் முன்னேற்றத்தையும் பறைசாற்றுவதாக அமைந்தது. ஆண்டுக்கு ரூ. 10 லட்சம் முதல் ரூ. 17 லட்சம் வரை ஊதியம் வழங்கும் 20க்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள் பங்கேற்றது இம்முகாமின் தனிச்சிறப்பாகும்.

திருச்சி மட்டுமன்றி தஞ்சை, கும்பகோணம், திருவாரூர், பெரம்பலூர், மதுரை, கரூர், திண்டுக்கல் உள்ளிட்ட அண்டை மாவட்ட இளைஞர்களும் பெருமளவில் பங்கேற்றதால், இது காவிரி நிலப்பரப்பின் மிகப்பெரிய வேலைவாய்ப்பு திருவிழாவாக மாறியது.

இம்முகாமில் வேலை கிடைக்காத இளைஞர்களுக்குத் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களையும் வேலையில் அமர்த்த கிவ் லைஃப் மற்றும் தி ரைஸ் அறக்கட்டளைகள் முயற்சி மேற்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் சரவணன் மாநகராட்சி ஆணையர் மதுபாலன் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு கேர் கல்லூரி நிர்வாக இயக்குனர் பிரதீப் செந்தில் மாருதி மருத்துவமனை நிர்வாகி டாக்டர் ஆனந்த் ரைஸ் இயக்கத்தின் தலைமை பொறுப்பாளர் ஜெகத் கஸ்பர், தொழில் அதிபர் மணிவண்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.2.2026) சென்னையில் நடைபெற்ற, சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் டாக்டர் ஆர்.என். மஞ்சுளா அவர்களின் மகள் மயூரி ஜேம்ஸ் கோவ் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் எ.வ.வேலு, மா. சுப்பிரமணியன், முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமான பி. வில்சன், அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன், தலைமை குற்றவியல் வழக்கறிஞர் திரு. அசன் முகம்மது ஜின்னா ஆகியோர் உடனிருந்தனர்.

துறைமுகம் தொகுதியில் – ரூ.13.56 கோடி மதிப்பில் –

பல்வேறு நவீன வசதிகளுடன் 'முதல்வர் திருமண மாளிகை!'

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து – 10 இணையர்களின் திருமணத்தை நடத்தி வைத்தார்!

சென்னை, பிப்.9-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வ.உ.சி சாலையில் 13.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள "முதல்வர் திருமண மாளிகை"யைத் திறந்து வைத்து, 10 இணையர்களின் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார்.

சென்னை, துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வ.உ.சி. சாலையில் (வால்டாக்ஸ் ரோடு), பெருநகர சென்னை மாநகராட்சி நிதி, துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ஆகியவற்றின் மூலம் 13.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பொதுமக்கள் தங்களது இல்லத் திருமணம் உள்ளிட்ட சுபநிகழ்ச்சிகளை குறைந்த செலவில், மனமகிழ்வுடன் நிறைவாக நடத்திடும் வகையில் குளிர்சாதனம் மற்றும் பல்வேறு நவீன வசதிகளுடன் மிகப்பிரமாண்டமாக "முதல்வர் திருமண மாளிகை" கட்டப்பட்டுள்ளது.

"முதல்வர் திருமண மாளிகை" தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்துடன் 24 ஆயிரம் சதுர அடி பரப்பளவு கொண்டதாகும். தரைத்தளத்தில் 30 எண்ணிக்கையிலான நான்கு சக்கர வாகனம், 100 எண்ணிக்கையிலான இருச்சக்கர வாகனம் நிறுத்துமிடம், முதல் தளத்தில் ஒரே சமயத்தில் 330 நபர்கள் அமர்ந்து உணவு உண்பதற்கான உணவுக் கூடம், நவீன சமையற்கூடம், இரண்டாம் தளத்தில் 550 இருக்கைகளுடன் குளிர்சாதன வசதிகளுடன் கூடிய திருமண மண்டபம், மணமக்கள் அறை, மின்தூக்கி வசதிகள், கழிவறைகள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.2.2026) துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வ.உ.சி சாலையில் (வால்டாக்ஸ் சாலை) 13.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள முதல்வர் திருமண மாளிகையை திறந்து வைத்து, 10 இணையர்களின் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களுக்கு சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, நிலைக்குழுத் தலைவர் மருத்துவர் கோ. சாந்தகுமாரி, மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் சேலம் மாவட்டத்தில் திறந்து வைத்த –

ரூ.196.92 கோடியில் 1,956 அடுக்குமாடிக் குடியிருப்புகள்!

திட்டப் பகுதியில் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் பங்கேற்று சிறப்புரை!

சேலம், பிப்.9

முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக சேலம் மாவட்டத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் சார்பில் 1,956 குடியிருப்புகள் ரூ.196.92 கோடி மதிப்பிலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் ரூ.13.50 கோடி மதிப்பிலும் மற்றும் மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் ரூ.75 இலட்சம் மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்ததைத் தொடர்ந்து, சேலம் மாநகராட்சி, திடீர் நகர் திட்டப் பகுதியில் இந்நிகழ்ச்சி சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பங்கேற்றார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக சேலம் மாவட்டத்தில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் சார்பில் ரூ.196.92 கோடி மதிப்பிலும், ஊரக வளரச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் ரூ.13.50 கோடி மதிப்பிலும், மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறை யின் சார்பில் ரூ.75 இலட்சம் மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்ததைத் தொடர்ந்து, சேலம் மாநகராட்சி, திடீர் நகர் திட்டப் பகுதியில் இந்நிகழ்ச்சி சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காகவும், நலனுக்காகவும் பல்வேறு திட்டங்களை அறிவித்துச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, முதலமைச்சர் அவர்கள் மகளிருக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். அதே போன்று, பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளுக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பு வளர்ச்சித்துறை, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில், சேலம் மாநகராட்சி, அவ்வை நகர் பகுதியில் ரூ.32.90 கோடி மதிப்பில் 336 அடுக்குமாடி குடியிருப்புகள், திடீர் நகர் பகுதியில் ரூ.62.71 கோடி மதிப்பில் 588 அடுக்குமாடி குடியிருப்புகள், அல்லிக்குட்டை 1 மற்றும் 2 திட்டப்பகுதியில் ரூ.49.25 கோடி மதிப்பில் 504 அடுக்குமாடி குடியிருப்புகள், நேரு நகர் 1 மற்றும் 2 திட்டப்பகுதியில் ரூ.27.81 கோடி மதிப்பில் 280 அடுக்குமாடி குடியிருப்புகள், காந்தி நகர் 1 மற்றும் 2 திட்டப்பகுதியில் ரூ.24.25 கோடி மதிப்பில் 248 அடுக்குமாடி குடியிருப்புகள் என மொத்தம் ரூ.196.92 கோடி மதிப்பில் 1,956 அடுக்குடிமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு, இன்றைய தினம் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த குடியிருப்புகள் 2 சாலிட்டேர் கதவுகள், 2 பிவிசி கழிவறை கதவுகள், 2 யுபிவிசி சன்னல்கள், 2 கழிவறை வெண்டிலேட்டர்களுடனும், வீட்டின் உட்புற பகுதியில் வெள்ளை நிறப்பூச்சும், வெள்ளிப்புற பகுதியில் வண்ண எமல்சன் பூச்சும் செய்யப்பட்டுள்ளது.

மேலும், இக்குடியிருப்புகளுக்கு, மாநகராட்சியிடமிருந்து குடிநீர் இணைப்பு பெறப்பட்டு வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றுடன் கூடிய உரிய குழாய்கள் பதிக்கப்பட்டு அதன் வழியாக பொது குடிநீர் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்படவுள்ளது. மேலும், ஒவ்வொரு குடியிருப்பிலிருந்து வெளியேறும் கழிவுநீர் சேலம் மாநகராட்சியின் பாதாள சாக்கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் ஆத்தூர், அயோத்தியாப்பட்டணம், எடப்பாடி, காடையாம்பட்டி, கொளத்தூர், மகுடஞ்சாவடி, மேச்சேரி, நங்கவல்லி, ஓமலூர், பி.என்.பாளையம், பனமரத்துப்பட்டி, சேலம், தலைவாசல், தாரமங்கலம், வாழப்பாடி, வீரபாண்டி, ஏற்காடு ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.13.50 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள், ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், உணவு தானிய சேமிப்பு கிடங்குகள், சமுதாயக்கூடங்கள், பொது சுகாதார கட்டடங்கள், பொது விநியோகக் கடைகள் உள்ளிட்ட பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகளையும், மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், ரூ.75 இலட்சம் மதிப்பில் சேலம் மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள நாமக்கல் மண்டலத்திற்கான புதிய மருந்து கட்டுப்பாடு, உதவி இயக்குநர் அலுவலக கட்டடம் ஆகிய பணிகள் என மொத்தம் ரூ.211.17 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணிகளை முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் திறந்து வைத்துள்ளார்கள்.

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், மாமன்ற உறுப்பினர் திருமதி சங்கீதா நீதிவர்மன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய செயற்பொறியாளர் விஜய மோகன், உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டத்திற்கு இன்று வருகை தரும் முதல்வர்–கழகத் தலைவருக்கு

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பிரம்மாண்ட வரவேற்பு!

மாவட்டக் கழகக் கூட்டத்தில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வேண்டுகோள்!

திருவள்ளூர், பிப் 09;

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. மாநகர. ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் ஆவடி ஹவுசிங் போர்டு கிருஷ்ணா மஹாலில் நடைபெற்றது.

திருவள்ளூர் மத்திய மாவட்ட அவைத் தலைவர் மா.ராஜி தலைமை வகித்தார் தலைமை செயற்குழு உறுப்பினரும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், தொகுதி பார்வையாளர்கள் நிவேதா ஜெசிகா. மாநில சிறுபான்மையினர் அணி இணைச் செயலாளர் சி. ஜெரால்டு, மாவட்ட துணை செயலாளர்கள் வி. ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்ரிஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார். பொதுக் குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ். கு.விமல்வர்ஷன், ஜெ.மகாதேவன், எஸ்.காஞ்சனாசுதாகர், எஸ்.சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் .

பகுதிச் செயலாளர் ஜி. ராஜேந்திரன் வரவேற்புரையற்றினார்.

இக்கூட்டத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர் தமிழ்நாடு சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

இன்று பிப்ரவரி 9ஆம் தேதி அன்று திருவள்ளூர் மாவட்டம் போலிவாக்கத்தில் தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்கும் விழாவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகை தர உள்ளார் எனவே

திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகத்தினர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்

பிப்ரவரி 11 ஆம் தேதி மகாபலிபுரம் திருவிடந்தை பகுதியில் நடைபெறும் பாகமுகவர்கள் கூட்டத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதிகளில் உள்ள பாக முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்

மார்ச் 1 தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவில் வெகு விமர்சியாக கொண்டாட வேண்டும்

2026 வருகின்ற சட்டமன்றத் தேர்தல்களில் ஆவடி மற்றும் பூந்தமல்லி தொகுதிகளில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக நிர்வாகிகள் இரவும் பகலும் பாராமல் கழகத்திற்காக உழைத்து மீண்டும் கழகத் தலைவர் அவர்களை முதலமைச்சராக இரண்டாவது முறை வெற்றி பெற செய்திட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கழக அயலக அணி தலைவர் கலாநிதி வீராசாமி, மாநகர ஒன்றிய நகர பகுதி செயலாளர்கள் சன்.பிரகாஷ், பேபி சேகர், பொன்.விஜயன், ஜி. நாராயண பிரசாத், டி. தேசிங்கு, என்.இ.கே. மூர்த்தி, தி.வை.இரவி, ப.ச.கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, சே.பிரேம் ஆனந்த், டி . முரளி கிருஷ்ணன் , தி.வை.இரவி, மற்றும்கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

பிப்ரவரி 11–ஆம் தேதி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், கோவளம் அருகே திருவிடந்தையில் நடைபெற உள்ள சென்னை – விழுப்புரம் மண்டல BLA–2, BLC சந்திப்பு மாநாட்டில் பங்கேற்பது தொடர்பாக நடைபெற்ற தாம்பரம் கிழக்கு – செம்பாக்கம் தெற்கு பகுதி கழக செயல்வீரர்கள் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு உரையாற்றினார். அருகில் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா, மாநகராட்சி மேயர் க. வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், பகுதிச் செயலாளர்கள் மாடம்பாக்கம் நடராஜன், செம்பாக்கம் சுரேஷ், த.ஜெயக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், கருப்பூர் பேரூராட்சியில் ரூ.18.50 லட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியினை நேற்று முன்தினம் (07.02.2026) திறந்து வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.